மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : சென்னையிலே ஆகின்ற செலவு அதிகமாக இருக்கிறது. மற்ற மாவட்டங்களில் அவ்வளவு செலவாவது இல்லை. சென்னை மாநகரத்தில் அதிகமான விலை கொடுத்து பண்டங்களை, காய்கறிகளை வாங்க வேண்டியிருக்கிறது. அந்த நிலையை வைத்துக் கொஞ்சம் கூட்டித் தரப்படுகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாணவர்களுக்கு வழங்கப் படுகின்ற உதவித் தொகை மார்ச் மாதம் இறுதியான பிறகு கூட கொடுக்கப்படுவது இல்லை. திருச்சி பெரியார் கல்லூரி, காந்தி கிராமக் கல்லூரி மாணவர்கள் இந்த ஆண்டு கூட இதைப்பற்றி அரசுக்குத் தெரியப்படுத்தி இருக்கிறார்கள். டிசம்பர் மாத இறுதிக்குள் இந்தத் தொகையை வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதைப் பற்றி மாண்புமிகு பாலசுந்தரம் அவர்கள் கேட்டபோதே விவரமாக எடுத்துச் சொன்னேன். நலத் துறையில் தாமதம் இல்லை. கல்வித் துறையில் தாமதம். கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகக் கூறி இருக்கிறார்கள்.

திரு. ஆ. கு. சுப்பையா : தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்க வருமான வரம்பு விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த வருமான வரம்பை ஐயாயிரம் ரூபாயாக உயர்த்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இவ்வளவு ஆண்டு காலமாக வருமான வரம்பு 1,500 ரூபாயாக இருந்தது. அது 2,000 ஆக்கப்பட்டு தற்போது 2,500 என்ற அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. படிப்படியாக உயர்த்தப்படும். இதுவே பெரிய உயர்வு என்றுதான் கருதுகிறேன்.

திரு. கு. காமாட்சி : இந்த உதவித் தொகை தாழ்த்தப்பட்ட கிறித்தவ சமுதாயத்தினருக்கும் பொருந்துமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாநில அரசு முழுக்க முழுக்க தொகை கொடுப்பதாக இருந்தால் அது கிறித்தவர்களுக்கும் பொருந்தும். இந்த உதவித் தொகைக்கு மத்திய அரசும் நிதி உதவி செய்கிற காரணத்தால் இது கிறித்தவர்களுக்குப் பொருந்தாது.

அரிசி கைப்பற்று

*800 வினா.—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு உணவு–வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1972- ஆம் ஆண்டு, சனவரி முதல் வாரத்தில், வட ஆர்க்காடு மாவட்டம் செய்யாருக்கு அருகில் உள்ள சோழவரத்திலிருந்து சென்னைக்கு பஸ் மூலம் எடுத்துச் சென்ற 18 மூட்டை அரிசியை, சிவில் சப்ளை அதிகாரிகள் போலீஸ் உதவியுடன் கைப்பற்றியது உண்மையா ?

1972 மார்ச் 30]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேருந்து ஒன்றில் அனு தியின்றி எடுத்துச் செல்லப்பட்ட 7 குவிண்டால் 40 கிலோ எடையுள்ள 18 சிப்பங்கள், தூசி காவல் நிலையத்திற்கு முன்னால், கைப்பற்றப்பட்டது. சம்பந்தப்பட்ட நபர்கள், கொள் முதல் செய்வதற்கென அந்த அரிசியைக் கொடுக்க முன் வந்ததன் பேரில், அந்த அரிசி முழுதும் அரசுக் கணக்கில் கொள்முதல் செய்யப்பட்டது.

திரு. கே. எ. வகாப் : வட ஆர்க்காடு மாவட்டம் உபரியான மாவட்டம்; குறைந்த பட்சம் அங்கிருந்து சென்னைக்கு அரிசி எடுத்து வருவதற்கு நம்முடைய அரசு அனுமதி அளிக்குமா ? இந்தத் தடைகள் சென்னைக்கும் வடஆற்காட்டுக்கும் ரத்து செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வட ஆற்காடு மாவட்டம் உபரி மாவட்டம் என்ற காரணத்தால்தான் லெவி முறை வைத்திருக்கிறோம். சென்னைக்குச் சொந்த உபயோகத்திற்கு எடுத்து வருவதாக இருந்தால் பர்மிட் வாங்கி எடுத்துக் கொண்டு வரலாம்.

திரு. நா. வீராசாமி : விவரம் தெரியாத பொது மக்கள் இப்படி அரிசியை 20 படி, 30 படி என்று பஸ்ஸில் ஏற்றிக் கொண்டு வருகிறார்கள். கண்டக்டர்களும், டிரைவர்களும் இதை ஏற்ற முடியாது என்று சொல்லி விட்டால் இப்படிப்பட்ட சங்கடங்கள் வராது. ஆகவே, போக்குவரத்துத் துறையிலிருந்து கட்டாயமாக இது மாதிரி அரிசி ஏற்றுவதை அனுமதிக்கக் கூடாது என்று சொல்லிவிட்டால் பயணிகளுக்குச் சௌகரியமாக இருக்கும் என்பதால் அதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கனம் அங்கத்தினர் கேட்ட கேள்வியின் மூலம் போக்குவரத்துத் துறையினர் இதிலே கவனம் செலுத்துவார்கள் என்று கருதுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : பர்மிட் வாங்கி அரிசி கொண்டு போகிறவர்கள் ஒரே பர்மிட்டை வைத்துக் கொண்டு பல முறை அரிசியை ஏற்றிப் போகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஒருமுறை அரிசி கொண்டுபோய்விட்டால் அந்த பர்மிட்டிலே எண்டார்ஸ் பண்ணுகிற ஏதாவது முறை கையாளப்படுகிறதா இல்லையா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : அங்கத்தினர் சொல்வதிலிருந்து திருடர்கள் பல வழிகளில் முயற்சிக்கிறார்கள் என்பது தெரிகிறது. குறிப்பிட்ட கேஸ் சம்பந்தமாக அவர்கள் சொல்லுவார்களானால் நடவடிக்கை எடுக்க முடியும். அவர்கள் கூறியது போன்ற விதிமுறைகளை வைத்திருக்கிறோம். அதையும் மீறி சமுதாய விரோதிகள் இப்படிச் செய்கிறார்கள் என்பது உண்மை.

திருமதி. த. ந. அனந்தநாயகி : அடிக்கடி இந்த விதிமுறைகள் மாற்றப்படுவதன் காரணமாக என்ன விதிமுறைகள் இருக்கின்றன என்பதே தெரியாத நிலை இருக்கிறது. ஆகவே, இந்த விதிமுறைகள் மாற்றப்

படுகின்ற நிலையில் மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் தக்க விளம்பரம் கொடுக்க முன் வருவார்களா ? சில சமயங்களில் பர்மிட் வைத்துக் கொண்டிருந்தாலும் பிடித்துக் கொள்ளுகிறார்கள். இந்த நிலைமையை எல்லாம் போக்கும் வகையில் விளம்பரம் செய்ய முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அரசாங்கம் ஏற்கனவே இதைப் பற்றி எல்லா விவரங்களும் பொது மக்களுக்குத் தெரியும்படி விளம்பரப்படுத்தியிருக்கிறது. தங்களுடைய சொந்த உபயோகத்திற்குக் கொண்டு வருகின்றவர்கள் பர்மிட் வாங்கிக் கொண்டு தாராளமாகக் கொண்டு வரலாம். இது அனைவருக்கும் தெரிந்த உண்மை. இந்த விதிமுறைகளை அடிக்கடி மாற்றுவதாக அராங்கத்திற்கு உத்தேசம் இல்லை. பொதுவாக, பத்து கிலோ கிராமுக்குக் கீழ் யார் வேண்டுமானாலும் அரிசி எடுத்துக் கொண்டு வரலாம். யாரும் பிடிக்கமாட்டார்கள். அதற்கு மேல் எடுத்து வரவேண்டுமென்றால் அரசாங்கத்தின் முன் அனுமதி பெற்று எடுத்துக் கொண்டு வரவேண்டும்.

திரு. ரா. ரா. முனுசாமி : தென்னாற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த ஏழைகள் நிறையப் பேர் சென்னையில் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பத்து படி, பதினைந்து படி என்று அரிசி எடுத்து வரத் தடை இருப்பதாகச் சொல்லுகிறார்கள். பதினைந்து படி வரை அவர்கள் அரிசி எடுத்துவர அரசு அனுமதிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சொந்தமாக நிலம் வைத்திருப்பவர்கள் எந்த இடத்தில் இருந்தாலும் அங்குள்ள வட்டாட்சித் தலைவரிடம் பெர்மிட் வாங்கி எடுத்து வந்தால் பிடிக்க மாட்டார்கள். அதுவே அதற்குப் பாதுகாப்பாக இருக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும் போது பத்து கிலோ வரையில் கொண்டு வரலாம் என்று சொல்கிறார்கள். பத்து கிலோ என்பது மிகவும் குறைவானதாகும். ஆகவே 15 கிலோ என்று ஆக்கினால் கிட்டதட்ட பத்துபடி வரும். அதையாவது அதிகப்படுத்த அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பத்து கிலோவிற்குக் கீழே கொண்டு வரலாம் என்று சொன்னேன். இதுவே பல முறை சென்றால் அதிகமாகிவிடும். 15 என்று ஆக்கினால் அதை 20 என்று ஆக்க வேண்டும் என்று சொல்வார்கள். இருப்பதே போதும் என்று நாங்கள் கருதுகிறோம்.

திரு. கே. என். குமாரசாமி : எல்லையோரப் பகுதிகளில் லாரிகளில், வண்டிகளில் போவதைத் தடுக்க முடிகிறது. குறுக்கு வழியே கால்நடைகளின் மீது மூட்டைக் கணக்கில் அரிசி வெளி மாநிலங்களுக்கு கடத்திச் செல்கிறார்கள். அது சம்பந்தமாக ஏதாவது தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா ? அப்படிப்பட்ட புகார்கள் அரசுக்கு நிறைய அனுப்பப்பட்டிருக்கிறதா ?